மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, விண்ணப்பிக்காமலே கொடுப்பது என்பது சரியாக வராது. அரசாங்கத்தில் கணக்கு வேண்டும். அதற்காக விண்ணப்பத்தை வைத்துத்தான் கொடுக்க முடியும். நாளைக்கு இதே சட்டமன்றத்தில் கேள்வி வரும்பொழுது கணக்குக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, விண்ணப்பத்தின் பேரில்தான் கொடுக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கலப்புத் திருமணம் செய்து கொண்டால் சில ஜாதிகளில் கட்டுப்பாடு செய்து ஜாதியை விட்டே தள்ளி விடுகின்றார்கள். அம்மாதிரி சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் ஜாதியைவிட்டுத் தள்ளியவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கட்டாயம் நடவடிக்கை எடுப்போம். அரசாங்கத்தின் சார்பிலே மட்டுமல்ல, இந்தக் கேள்வியைக் கேட்கிற உறுப்பினருக்கே அதே எண்ணந்தான் இருக்கும்.

அரிசனங்களுக்குத் தையல் மிஷின்கள் வழங்கல்

*475 வினா.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை அரிசனங்களுக்கு தையல் மிஷின்கள் கொடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 91.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கொடுக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிறார்கள். நான் கேட்டது 1973-74-ஆம் ஆண்டுக்கு. இதைத் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 1973-74-ஆம் ஆண்டு நிதியில் வழங்கப்பட்ட தையல் மிஷின்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, பொதுவாக அரசாங்கத்தின் நிலை 1973-74 என்பது ஒரு ஆண்டு. அந்த ஆண்டுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் 91 தான் கொடுக்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு உங்களுக்குச் சந்தேகம் எழுந்தால் வேறொரு கேள்வி மூலம் விவரம் கேட்டால் விவரம் வாங்கித் தருகிறோம்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இந்தத் தையல் மிஷின்கள் கொடுப்பது சம்பந்தமாகச் சென்ற ஆண்டு பணம் ஒதுக்கீடு செய்யாததால் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு கொடுப்பதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? எப்பொழுது கொடுக்கப்படும் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு என்றால் இப்பொழுது 1975–76-க்குக் கேட்கிறார்களா அல்லது 1974–75-ஆம் ஆண்டுக்குக் கேட்கிறார்களா என்று புரியவில்லை. 1974–75-ஆம் ஆண்டுக்கு என்றால் இதுவரைக்கும் செலவாகிவிட்டிருக்கும். அது விவரம் தனியாகக் கேட்க வேண்டும். 1975–76-ஆம் ஆண்டுக்கு என்றால் அதற்கு இன்னும் மான்யமே வரவில்லை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, குறிப்பாக 1974-ஆம் ஆண்டுக்கான தையல் மிஷின்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்பது என்னுடைய புகார்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, கரெக்ட். 1974–75-ஆம் ஆண்டுக்கு இப்பொழுதுதான் செலக்ஷன் நடந்து கொண்டிருக்கிறது. 31-ஆம் தேதிக்குள் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டு தகவல் கொடுப்பார்கள். ஆனால் இது 1973-ஆம் ஆண்டைப் பற்றியது, 1973-இல் கொடுத்த விவரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கேட்டது 1973-ஆம் ஆண்டைப்பற்றி. 1974-ஆம் ஆண்டுக்கு வேண்டுமானால் தனிக் கேள்வி போடுங்கள்.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் நுழைந்து மாணவர்களைச் சிலர் தாக்கியது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். திருவாளர் கோவை செழியன், டாக்டர் எச்.வி. ஹாண்டே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், கே.டி. கே. தங்கமணி, என். கே. பழனிசாமி, சோ. அழகர்சாமி, எம். சுரேந்திரன் ஆகியோர் சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் சிலர் நுழைந்து சில மாணவர்களைத் தாக்கியது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இது சம்பந்தமாக 25-ஆம் தேதியன்றே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அப்பொழுது முதலமைச்சரவர்கள் முழுவிவரங்களும் இல்லாத காரணத்தால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். இதிலே இரண்டு மூன்று